# SNS academy

an International CBSE Finger Print School
Coimbatore

அ)

தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேயென் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோடு உவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**
   தமிழ்விடு தூது.
2. **இப்பாடலை இயற்றியவர் யார்?**
   அறியப்படவில்லை.
3. **பிரித்து எழுதுக :** முத்தமிழே, உவந்துரைக்கும்.
   முத்தமிழே = மூன்று + தமிழே
   உவந்துரைக்கும் = உவந்து + உரைக்கும்
4. **விரித்து எழுதுக :** முத்தமிழ்
   இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.
5. **விளம்பக்கேள் - பொருள் கூறுக.**
   சொல்வதைக் கேட்பாயாக.
6. **உண்ணப்படும் தேன் எது?**
   தமிழ்.
7. **அடி எதுகையை எடுத்து எழுதுக.**
   தித்திக்கும் | உண்ணப்படும்
   முத்திக் | விண்ணப்படும்
8. **விளிச் சொற்களை எடுத்து எழுதுக.**
   கனியே; முத்தமிழே; தேனே.
9. **'விண்ணப்பம்' என்பதன் பொருள் யாது?**
   வேண்டுகோள்.
10. **'உவந்து' என்பதன் பொருள் யாது?**
    மகிழ்ந்து.
11. **சீர் மோனையை எடுத்து எழுதுக.**
    முத்திக் - முத்தமிழே
    உண்ணப் - உன்னோடு - உவந்து
    - உரைக்கும்
    விண்ணப்பம் - விளம்பக்கோள்

ஆ)

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ - திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே

1. **இப்பாடல் இடம்பெறும் நூல் எது?**
   தமிழ்விடு தூது.
2. **இப்பாடலை இயற்றியவர் யார்?**
   அறியப்படவில்லை.
3. **குறம், பள்ளு என்று கூறப்படும் நூல்கள் யாவை?**
   குறவஞ்சி, முக்கூடற்பள்ளு.
4. **மூவினங்கள் யாவை?**
   துறை, தாழிசை, விருத்தம்.
5. **இலக்கணக் குறிப்பு தருக :** கொள்வார், சிந்தாமணி.
   கொள்வார் - வினையாலணையும் பெயர்
   சிந்தாமணி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
6. **அடி எதுகையை எடுத்து எழுதுக.**
   குறம் | வந்து
   உறவு | சிந்து
7. **சீர் மோனையை எடுத்து எழுதுக.**
   உறவு - உண்டோ
8. **சீர் எதுகையை எடுத்து எழுதுக.**
   உறவு - திறம்
   வந்து - சிந்தா
9. **இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**
   குறம் என்றும்.
   பள்ளு என்றும்.

**இ)**

**முற்றும்உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார்நீ**
**குற்றம்இலாப் பத்துக் குணம்பெற்றாய் - மற்றொருவர்**
**ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மேல் உண்டோநீ**
**நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய்**

---

1. **இப்பாடல் இடம்பெறும் நூல் எது?**
   தமிழ்விடு தூது.
2. **இப்பாடலை இயற்றியவர் யார்?**
   அறியப்படவில்லை.
3. **முற்றும் உணர்ந்த தேவர்கள் பெற்ற முக்குணங்கள் யாவை?**
   சத்துவம், இராசசம், தாமசம்.
4. **தமிழ் பெற்ற குணங்கள் எத்தனை?**
   பத்து.
5. **மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணம் எத்தனை?**
   ஐந்து.
6. **தமிழ் பெற்ற வண்ணங்கள் எத்தனை?**
   நூறு
7. **'நா' என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?**
   ஓர் எழுத்து ஒரு மொழி.
8. **முக்குணம் - விரித்து எழுதுக.**
   சத்துவம், இராசசம், தாமசம்.
9. **இலக்கணக் குறிப்பு தருக :** முக்குணம், இலா, பெற்றாய், ஆக்கிய, நோக்கிய
   முக்குணம் - பண்புத்தொகை
   இலா - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
   ஆக்கிய,
   நோக்கிய - பெயரெச்சம்
   பெற்றாய் - முன்னிலை ஒருமை வினைமுற்று.
10. **அடி எதுகையை எடுத்து எழுதுக.**
   முற்றும் | ஆக்கிய
   குற்றம் | நோக்கிய
11. **சீர் மோனை எடுத்து எழுதுக.**
   முற்றும் - முக்குணமே
   குற்றம் - குணம்.

---

**ஈ)**

**ஊனரசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள்உணவு**
**ஆன நவரசம்உண் டாயினாய் - ஏனோர்க்கு**
**அழியா வனப்பு ஒன்று அலது அதிகம் உண்டோ**
**ஒழியா வனப்புஎட்டு உடையாய்**

1. **இப்பாடல் இடம்பெறும் நூல் எது?**
   தமிழ்விடு தூது.
2. **இப்பாடலை இயற்றியவர் யார்?**
   அறியப்படவில்லை.
3. **உணவின் சுவைகள் எத்தனை?**
   ஆறு.
4. **தமிழ், செவிகளுக்கு விருந்தளிக்கும் சுவைகள் எத்தனை?**
   ஒன்பது.
5. **வனப்புகள் எத்தனை?**
   எட்டு.
6. **'ஊனரசம்' என்பது எதைக் குறிக்கும்?**
   ஆறு சுவைகள்.
7. **'வனப்பு' என்பதன் பொருள் யாது?**
   அழகு.
8. **அடி எதுகையை எடுத்து எழுதுக.**
   ஊனரசம் | அழியா
   ஆன நவரசம் | ஒழியா
9. **இலக்கணக் குறிப்பு தருக :** அழியா, ஒழியா
   அழியா, ஒழியா - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
10. **சீர் மோனையை எடுத்து எழுதுக.**
   ஊனரசம் - உண்டோ - உணவு
   அழியா - அலது - அதிகம்